வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தாய்த் தெய்வ வழிபாடு

செல்விசி.வனஜா,
முதுகலை முதலாமாண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
கோபிகலை அறிவியல் கல்லூரி,
கோபிசெட்டிபாளையம்.

ஆய்வுச் சுருக்கம்

தாய்த்தெய்வ வழிபாடு என்பது ஒரு பழங்கால வழிபாட்டு முறையாகும். இதில் குறிப்பாக பெண் தெய்வங்கள் வழிபடப்படுவது தாய்மை மற்றும் வளமையின் குறியீடாகக் கருதப்படுகிறது. இது இயற்கை, கிராமப்புற வாழ்க்கை மற்றும் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த வழிபாட்டில் பல்வேறு தெய்வங்களும், சடங்குகளும் அடங்கும். அவை அனைத்தும் மக்களின் நம்பிக்கைகளாகக் கருதப்படுகின்றன. பழந்தமிழரின் இலக்கியத்தில் இதைப்பற்றிய செய்திகள் சில காணப்படுகின்றன. மேலும் தாய்த்தெய்வ வழிபாடு பற்றிய பதிவுகள் சங்க இலக்கியத்திலும்,பத்துப்பாட்டு மற்றும் நீதி நூல்களின் மூலம் விளக்கப்படுகின்றன.

கலைச்சொற்கள்

கடாப்பலி, வெற்று அடுப்புகள், படைப்புச் சோறு, அபிடேகம், நாட்பலி, மதுக்கொடை.,

முன்னுரை

தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் தாய்த் தெய்வக் கோயில்கள் காணப்படுகின்றன. மனைக்கு விளக்காக மடவார் இருப்பர். ஊருக்கும் இனத்திற்கும் பாதுகாவலாக தாய்த் தெய்வங்கள் இருப்பர். இந்தப் பெண்தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நிகழ்த்துகின்றனர். அந்த திருவிழாவில் வழிபாடுகளும் பலவித

சடங்குகளும் நடத்தப்பட்டன. இதன்மூலம் தெய்வங்களின் மேல் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் இலக்கியங்களில் புலப்படுகின்றன.

தாய்த் தெய்வக் கோயில்களில் வழிபாட்டு முறைகள்

தாய்த்தெய்வ வழிபாடு என்று தோன்றியதோ,அப்பொழுதே வழிபாட்டு முறைகளும் தோன்றியிருக்க வேண்டும். அச்ச உணர்ச்சினாலும் தேவையைக் கருதியும் நம்பிக்கையுடனும் தோன்றிய வழிபாட்டில், வழிபாட்டு முறைகளும் மக்களின் பழக்கவழக்கங்களையோடு இணைந்துள்ளன.

"சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு". (குறள்-8)

என்ற குறளுக்கு 'மழை பெய்யாதயின் தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களால் செய்யப்படும் விழாவும் பூசையும் நடைப்பெறாது என பொருள் கூறுகிறார் பரிமேலழகர். மேலும் இங்கு சிறப்பு என்பது விழாக்கால வழிபாடு என்றும்,பூசனை என்பது நாள் வழிபாடு என்று கொள்ளப்படுகிறது.

நாள் வழிபாடு

நாள் வழிபாட்டைச் சிறப்பிக்கும் 'நாட்பலி' என்ற சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. நாட்பலி என்பது காலை வேளையில் கடவுளுக்கு ஆற்றப்படும் வழிபாடாகும். இவ்வழிபாடு கொற்கை, வெற்றிவேல் அம்மன் கோயிலில் மட்டும் ஒருவேளை பூசை நடைபெறுகிறது. ஏரல், நாட்டாறு, குரங்கணி, முத்துமாலையம்மன், கோவங்காடு, ஆத்திமரத்தம்மன் ஆகிய கோவில்களில் இரண்டு வேளைகள் பூசை நடைபெறுகின்றன. மேலும் சிறப்பான நாட்களில் மூன்று வேளை பூசைகள் நடத்தப்படுகின்றன.

அம்மனுக்கு அலங்காரம் செய்து,சாம்பிராணி தூபம்,கற்பூர ஆராதனை காட்டி,வெண்சோறு படைத்து வருகின்ற பக்தர்களுக்கு திருநீறும்,குங்குமமும் பூசனைப் பொருள்களாகக் கொடுக்கப்படுகிறது.

'போகுபலி வெண்சோறு' (புறநானூறு-331)

என்றும் வெண்சோறு படைத்தலை குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவங்காடு, ஆத்திமரத்தம்மன் கோவிலும்,கொற்கை,வெற்றிவேலம்மன் கோவிலிலும் இம்முறையில் நாள் வழிபாடு நடத்தப்படுகிறது.

மக்கள் தங்கள் வாழ்வின் சிறப்பான நாட்களில் குடும்பத்தினரோடு கோவிலுக்கு செல்வர். அப்போது பூசைக்குத் தேவையான கற்பூரம், தேங்காய், பழம்,பூ, பன்னீர் போன்ற பொருட்களைத் தாங்களே எடுத்து வந்து,வழிபாடு நடத்திச் செல்கின்றனர். இதனை சங்க இலக்கியம்,

வேறுபடு சாந்தமும்,வீறுபடு புகையும்
ஆறுசொல் வளியின் அவியா விளக்கமும் (பரிபாடல்-8)

என்பதாகக் கடவுளை வணங்கச் செல்பவர்கள் கொண்டு செல்லும் பொருட்களைக் குறிப்பிடுகின்றது.

'பல்மலர் சிதறிப் பராவுறு பலிக்கே'. (நற்றிணை-322)

என மலரிட்டு வழிபடுதலைக் குறிப்பிட்டுள்ளது.

விழாக்கால வழிபாடு

விழாக்கால வழிபாட்டில் சிறப்பானதாகக் கொடை விழா கருதப்படுகிறது.பெண் தெய்வத்திற்கு அப்பகுதி மக்களால் மகிழ்வோடு அளிக்கப்பெறுவதே கொடை விழாவாகும்.

வேங்கை கண்ணியன் இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனர்,கொடையே (அகநானூறு-282)

பெண்ணைக் கொடுப்பதும் கொடை என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. பெண் தெய்வத்திற்கு மக்களால் கொடுக்கப்படுவதும் கொடை என்ற சொல்லால் வழங்கப்பட்டு வருகின்றது.

முத்துமாலை அம்மன் கோவில் கொடை விழா ஆனி மாதம் கடைசி செவ்வாய் நடைபெறுகிறது.விழாக்கால வழிபாடாக திருமால் பூசையும் சிறிய கொடை விழாவும் சிறப்பாகத் தை மாதம் நடைபெறுகிறது.

மக்களின் விருப்பத்தினால் தெய்வத்திற்கு விழா வழிபாடு செய்யப்படுகிறது.சங்க இலக்கியத் தொடர்களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட ஊர்கள்

"சாறு கொள் ஊர்" (அகநானூறு-206)

"கல்லென் பேரூர் விழவுடை ஆங்கண்" (புறநானூறு-84)

என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

விழாவிற்கு வந்திருந்தவர்கள் ஆடை அணிகலன்களால் தம்மை ஒப்பனைகள் செய்திருந்தனர் என்பதை,

'உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழைஅணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே" (குறுந்தொகை-295)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

'இரும் பிழிமகாஅர் இவ்அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்' (அகநானூறு-122)

இதன் மூலம் விழாக்காலத்தில் தூக்கத்தினையும் மறந்து மக்கள் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்றமை அறியப்படுகிறது.

விழாக்களும் சடங்குகளும்

அ.பங்குனி உத்திர விழா

ஏரல் நட்டாறு அம்மன் கோவிலில் பங்குனி உத்திர விழா கொண்டாடுவதற்காக உத்திரத்திற்கு முந்தைய முகூர்த்த நாளில் கால் நாட்டுதல் நடைபெறுகிறது. இந்த விழாவுக்கான அனைத்து செலவுகளும் கோவிலுக்காக பெறப்பட்ட வருமானத்திலிருந்து செய்யப்படுகின்றன. இவ்விழா மூன்று நாட்கள் நடைபெறுகின்றன. அந்நிகழ்வுகள்,

1. மாக்காப்பு அலங்காரம்
2. பால் குடம் எடுத்தல்
3. தீர்த்தம் எடுத்து வரல்
4. அபிடேகம், அலங்காரம், ஆராதனை
5. பலியிடல்
6. படையல்
7. அன்னதானம்(படைப்புச் சோறு வழங்குதல்)
8. கலை நிகழ்ச்சிகள்

என்ற வகையில் அமையும்.

இலக்கியத்தில் பங்குனி உத்திர விழா

சங்க இலக்கியத்தில் பங்குனி உத்திர விழா பற்றிய குறிப்பினைப் பெற முடிகிறது.

'வருபுனல் நெரிதரும் இருகரைப் பேராற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்டுபொழிற்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பின்
தீதுஇல் அடுப்பின் அரங்கம் போல' (அகநானூறு-137)

காவிரியின் அரங்கமாகிய ஆற்றின் நடுவிடத்தில் பங்குனி உத்திர விழா காண வந்தோர் பலரும் உணவாக்கி உண்ட பின்னர் மக்கள் இல்லாது தீ இல்லாத வெற்று அடுப்புகள் மட்டும் காணுதல் அழகின்றித் தென்படுகிறது என்றும் இப்பாடல் வரிகள் தெரியப்படுத்துகின்றன. இவ்வாறு நாட்டாறு அம்மன் கோவிலில் பங்குனி உத்திர விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஆ. கார்த்திகை நாள் திருவிழா

கார்த்திகைத் திருநாள் ஊர்களில் சிறப்பான திருவிழாவாகப் போற்றப்படுகிறது.இதனை,

உலகு தொழில் உவந்து,நாஞ்சில் துஞ்சிய,
மழை கால் நீங்கிய மாசு விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர,மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடு நாள் (அகநானூறு-141)

உழுகின்ற தொழிலை முடித்து, இயற்கையும் மழை பெய்து முடிந்த காலம் தெருக்களில் விளக்குகள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.மாலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. ஊரில் உள்ளோர் அனைவரும் கூடி இவ்விழாவினை எடுப்பர். சங்ககாலச் சமுதாயத்தில் ஊரார் அனைவரும் இணைந்து கொண்டாடிய கார்த்திகைத் திருநாள் இன்றளவும் ஊர் முழுதும் விரதம் இருந்து கொண்டாடப் படுகிறது. இது பழமையின் எச்சமாகப் பார்க்கப்படுகிறது.

இ. ஆனித் திருவிழா

ஆனி மாதம் கடைசி செவ்வாய்க்கிழமையன்று பகல் ஒரு மணிக்குச் சிறப்புப்பூசைகள் நடைபெற்று மக்கள் பொங்கலிட்டு கடாப் பலியிடுகின்றனர்.கோவிலின் வாசலில் இந்நிகழ்வு நடைபெறுகிறது என்பது தெரியப்படுக்கிறது

ஈ. மதுப்பொங்கல் சடங்கு

இதனை மதுக்கொடை என்றும் கூறுவர். கால்நாட்டு விழாவிற்கு கோவிலில் பெரிய மண் கலயத்தில் அவித்த நெல், நெய், தயிர், நவதானியத்தை இடுகின்றனர். கலத்தின் வாயை வெள்ளத்துணியால் கட்டி விடுவின்றனர். இம்மதுக் கலத்திற்குப் பூசைகள் செய்து சாமியாடுபவர் வீட்டில் வைத்திருப்பர். செவ்வாய்க்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்கு ஒரு காலத்தில் மதுவினை நிரப்பி பொங்க வைப்பர். வடதிசை நோக்கிப் பொங்குமாறு பார்த்துக் கொள்கின்றனர். அவ்வாறு மது பொங்கினால் தெய்வம் ஏற்றுக் கொண்டதாகவும், மது பொங்குவது போல தங்கள் வாழ்வில் வளம் பொங்க வேண்டும் என்பதன் அறிகுறியாகவே மதுப்பொங்கல் சடங்கினைச் செய்கின்றனர்.

முடிவுரை

விழாக்கள், வழிபாடுகள், சடங்குகள் சமுதாயத்தில் ஒருமைப்பாட்டுணர்வும், உறவுகளைப் பேணுவதும்,தூய்மையுடன் வரும், தவறு செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வும் அளித்து தனிமனித நல்லுணர்வைப் பாதுகாத்து சமுதாயம் நன்மை பெற வழி வகுக்கின்றன. தாய்த்தெய்வ வழிபாட்டு மரபுகளைப் போற்றிப் பாதுகாத்து வரும் மக்கள் சமுதாயத்தில் பண்பாட்டுப் புதையல்களைச் சுமக்கிறோம் என்று தெரியாமல் சுமந்து தாய்த்தெய்வ வழிபாடு என்ற பெண்மைப் போற்றும் பழந்தமிழர் வழிபாட்டு முறையைத் திறம்பட அழியாமல் காத்து வருகின்றனர் என்பதே உண்மை எனலாம்.

சான்றெண் விளக்கம்:

1.முனைவர் இரா.ருக்மணி-சிதம்பரனார் மாவட்டச் சிறு தெய்வங்கள்,ப.62

2.பி.எல்.சாமி-தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு,ப.1

3.முனைவர் இரா.ருக்மணி-சிதம்பரனார் மாவட்டச் சிறு தெய்வங்கள்,ப.114

4.முனைவர் சு.சண்முகசுந்தரம்-நாட்டுப்புறவியல்,ப.160

துணை நூற்பட்டியல்:

1. ருக்மணி இரா. முனைவர். - சிதம்பரனார் மாவட்டச் சிறு தெய்வங்கள்,

காவ்யா,

16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்ரம், கோடம்பாக்கம், சென்னை-600 024,

முதற்பதிப்பு: டிசம்பர் 2008.

2. சாமி பி.எல். – தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-B,சிட்கோ இண்டஸ்ட்ரி ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை-600 098, முதற்பதிப்பு: செப்டம்பர்,1975.

3. சண்முகசுந்தரம் முனைவர் சு.- நாட்டுப்புறவியல், காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை-600024, முதற்பதிப்பு:சனவரி,1975